භාණ්ඩාගාර මෙහෙයුම් දෙපාර්තමේන්තුව
திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்
**Department of Treasury Operations**

තැ.පෙ.1559, මහ භාණ්ඩාගාරය, මුදල් අමාත්‍යාංශය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
தபெ. 1559,பொது திறைசேரி, நிதி அமைச்சு, கொழும்பு 01, இலங்கை
P.O.Box: 1559, General Treasury, Ministry of Finance, Colombo 01, Sri Lanka

| | | | | | |
|---|---|---|---|---|---|
| අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் நாயகம் / **Director General** | දුරකථන / தொலைபேசி / **Telephone** | **+94 11 2484729** | ෆැක්ස් / பெக்ஸ் / **Fax** | **+94 11 2431498** | ඊ-මේල් / மின்-அஞ்சல் / **E-mail** **dgto@tod.treasury.gov.lk** |


| | | | |
|---|---|---|---|
| මගේ අංකය / எனது இல / My Number | TO/DCM/CLOCB/2014 | ඔබේ අංකය / உமது இல / Your Number | දිනය / திகதி / Date 2016.11. 18 |

**திறைசேரிச் செயற்பாடுகள் சுற்று நிருப இல.: 07/2016**

அமைச்சுக்களின் செயலாளர்கள்,

திணைக்களத் தலைவர்கள் மற்றும்

மாவட்டச் செயலாளர்கள் யாவருக்கும்,

**<u>2016 ஆம் ஆண்டிற்கான காசுப் புத்தகங்களை மூடுதலும், கட்டுநிதிக் கணக்குகளைத் தீர்த்தலும்</u>**

2016 ஆம் ஆண்டின் முடிவில் காசுப் புத்தகத்தினை மூடுகின்ற போதும், கட்டுநிதிக் கணக்கினைத் தீர்க்கின்ற போதும் கீழ்க் காணப்படுகின்ற படிமுறைகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்குமாறும் உரிய திகதிகளில் அல்லது அதற்கு முன்னர் அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து கொள்ளுமாறும் தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

1. **2016 டிசம்பர் 31 அன்று காசுப் புத்தகத்தை மூடுதல்**

2016 ஆம் ஆண்டின் காசுப் புத்தகம் 2016 டிசம்பர் 31ம் திகதி முடிவில் பின்வரும் படிமுறைகளுக்கு அமைய மூடப்படுதல் வேண்டும்.

அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் மாவட்டச் செயலாளர்கள் ஆகியோரினால் தமது அலுவலகத்திலும் உப அலுவலகத்திலும் கணக்குகளை மூடும் பொருட்டு பொறுப்புவாய்ந்த பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவருக்கு, தொடர்புடைய உத்தியோகத்தரின் பெயரிலேயே அதிகாரம் வழங்கப்பட வேண்டிய அதேவேளையில், அத்தகைய அதிகார ஒப்படைப்பின் பிரதியொன்றினைக் கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரினால் 2016 ஆம் ஆண்டிற்கான நிதி ரீதியான கொடுக்கல் வாங்கல்கள் 2016 டிசம்பர் 31 ஆம் திகதியன்று பூர்த்தி செய்ய வேண்டியிருக்கின்ற அதேவேளையில், அதன் பின்னர் எதுவித நிதிசார் கொடுக்கல் வாங்கல்களையும் 2016 ஆம் ஆண்டிற்காக மேற் கொள்ளலாகாது. மேலும் அந்த உத்தியோகத்தரினால் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஏற்ப தொடர்ந்தும் காசேடுகளை பயன்படுத்தும் அலுவலகங்களுக்குள் 2016 டிசம்பர் 31 ஆம் திகதியின் பின்னர் எதுவித நிதிசார் கொடுக்கல் வாங்கலையும் 2016 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய காசேடுகளில் பதிவதற்கு முடியாதவாறு, ஒவ்வொரு காசுப் புத்தகத்திலும் அன்றைய தினத்தில் பதியப்படுகின்ற கடைசிப் பதிவின் கீழ் சிவப்புக் கோடொன்றினை வரைந்து கொள்வதுடன், 2016 ஆம் ஆண்டின் காசுப் புத்தகத்தை மூடி தனது பெயர், கையொப்பம், பதவி, திகதி மற்றும் நேரம் என்பவற்றினையும் குறிப்பிடுதல் வேண்டும்.

2. **2016 வருடத்திற்கான கட்டுநிதிக் கணக்குகள் (7002) ஐ மூடுவதற்காக ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தின் மீதியை பொதுத் திறைசேரிக்கு திருப்பியனுப்புதல்**

2.1 அமைச்சுக்கள் மற்றும் உப அலுவலகங்களைக் கொண்டிராத திணைக்களங்கள் 2016 டிசம்பர் 31 அன்று உள்ளவாறான காசுப் புத்தக மீதியினை உறுதிப்படுத்தும் படிவம் ரீஓடி/ஜஎம்பி/06 ஐப் பூரணப்படுத்தி 2017 ஜனவரி 02 அன்று உங்களுடைய உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கைப் பேணிவரும் சம்பந்தப்பட்ட வங்கிக் கிளையில் சமர்ப்பிப்பதோடு வங்கியால் உங்களுக்கு வழங்கப்படும் "வரவு" தகவல் குறிப்பு கிடைத்தவுடனேயே அதன் அத்தாட்சிப்படுத்திய பிரதியொன்றினையும் படிவம் ரீஓடி/ஜஎம்பி/06 இன் பிரதியையும் தாமதிக்காமல் இந்தத் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.




| | | | | | |
|---|---|---|---|---|---|
| කාර්යාලය / அலுவலகம் / Office | දුරකථන / தொலைபேசி / Telephone | +94 11 2484600<br>+94 11 2484700 | ෆැක්ස් / பெக்ஸ் / Fax | +94 11 2484970<br>+94 11 2320042 | වෙබ් අඩවිය / இணையதளம் / Website www.treasury.gov.lk |

2.2. அமைச்சுக்கள் மற்றும் உப அலுவலகங்களைக் கொண்டுள்ள திணைக்களங்கள், மாவட்ட செயலகங்கள் என்பவற்றினால் 2016 டிசம்பர் 31 அன்று உள்ளவாறான காசுப் புத்தக மீதியைக் குறிப்பிட்டு படிவம் ரீஓடி/ஐஎம்பி/06 ஐ பூரணப்படுத்தி 2017 ஜனவரி 04 அன்று அல்லது அதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட வங்கிக் கிளையில் சமர்ப்பிப்பதோடு வங்கியால் வழங்கப்படும் வரவுத் தகவல் குறிப்பின் அத்தாட்சிப்படுத்திய பிரதியொன்றினையும் படிவம் ரீஓடி/ஐஎம்பி/06 இன் பிரதியையும் இத் திணைக்களத்திற்கு விரைவாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

2.3 உப அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கட்டுநிதிகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஏனைய கட்டுநிதிகள் என்பவற்றை 2017 சனவரி 02 ஆம் திகதியன்று திறைசேரிக்கு அனுப்பி வைக்கக் கூடிய வகையில், தேவையான முன்னேற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். தங்களினால் உப அலுவலகங்களிலுள்ள காசு மீதிகளை வரவழைக்கும் போது தொடர்புடைய வங்கிக் கிளையுடன் கலந்தாலோசித்து மேலே 2.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள முறை போன்ற வசதியான முறைமை ஒன்றினை பின்பற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.

2.4 இந்தத் திணைக்களத்தால் 2017 ஜனவரி மாதத்தின் முதலாவது வேலைநாளில் 2017 ஆம் ஆண்டுக்கான கட்டுநிதியை விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்ற படியினால் எந்தவொரு அமைச்சும், திணைக்களமும் 2016 ஆம் ஆண்டுக்கான கட்டுநிதியின் மீதிகளில் எந்தவொரு பகுதியினையும் பிடித்து வைத்திருக்க வேண்டியதில்லை. வருட முடிவில் காசுப் புத்தக மீதி இல்லாது இருப்பினும் கூட அதுபற்றிக் குறிப்பிட்டு வெற்று அறிக்கையினை மேலே 2.1 மற்றும் 2.2 இல் உள்ள அறிவுரைகளின பிரகாரம் தாமதமின்றி திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

2.5 அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் மாவட்டச் செயலாளர் அலுவலகங்களுக்காக 2017 ஆம் ஆண்டுக்கான முதலாவது கட்டுநிதியை விடுவித்த பின்னர் கட்டுநிதி விடுவிக்கப்படுவது மேலே 2.1, 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்த பின்னரேயாகும் என்பதை தயவுடன் கருத்திற் கொள்ளவும்.

3. **2016 வருடத்திற்கான மீளளிக்கக்கூடிய வெளிநாட்டு உதவி கட்டுநிதியினை (7003) தீர்த்துக்கொள்வதற்கு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தின் மீதியை பொது திறைசேரிக்கு திருப்பியனுப்புதல்.**

3.1 மீளளிக்கக்கூடிய வெளிநாட்டு உதவி கட்டுநிதிகாகக் 7003/0/0/..../16 குறியீட்டு இலக்கத்தின் கீழ் கருத்திட்டத்தின் மூலம் பெற்றுக்கொண்ட கட்டுநிதியில் 2016 டிசம்பர் 31 அன்று உள்ளவாறான காசுப் புத்தக மீதியினைக் குறிப்பிட்டு படிவம் ரீஓடி/ஐஎம்பி/07 இனை பூரணப்படுத்தி 2017 ஜனவரி 02 அன்று சம்பந்தப்பட்ட வங்கிக் கிளையில் சமர்ப்பிக்க வேண்டிய அதேவேளையில் வங்கியால் வழங்கப்படும் வரவுத் தகவல் குறிப்பின் அத்தாட்சிப்படுத்திய பிரதியொன்றினையும் படிவம் ரீஓடி/ஐஎம்பி/07 இன் பிரதி மற்றும் ரீஓடி/ஐஎம்பி/07(i) சரியாகப் பூர்த்தி செய்து தொடர்புடைய அமைச்சுக்கு பிரதியொன்றினைக் கொண்டதாக தாமதிக்காமல் திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 மீளளிக்கக்கூடிய வெளிநாட்டு உதவியின் கீழ் வழங்கப்பட்டுள்ள கட்டுநிதி தவிர்ந்த ஏனைய பெறுகைகள் கட்டுநிதிக் குறியீடு 7003 இன் கீழ் கணக்கு வைக்கப்பட முடியாததால், ஏனைய பெறுகைகள் இந்தக் கட்டுநிதி இணக்கக் கூற்றுகளுக்கு (ரீஓடி/ஐஎம்பி/07(i)) உள்ளடக்கக் கூடாத அதேவேளையில், அவ்வாறான பெறுகைகள் கட்டுநிதிக் குறியீடு 7002 இன் கீழ் கணக்கு வைக்கப்படல் வேண்டும்.

4. முன்னைய வருடங்களில் செலுத்த வேண்டியிருக்கின்ற ஏதேனும் நிலுவையாகவுள்ள கட்டுநிதிகள் இருப்பின், அவற்றைச் செலுத்தாமை அல்லது திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்திற்கும் அரச கணக்குகள் திணைக்களத்திற்கும் குறிப்பிட்ட திகதிக்கு அனுப்பி வேண்டிய அறிக்கைகள் உரிய திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்காமை அல்லது இந்தச் சுற்றறிருபத்தின் அறிவரைகளுக்கு இணங்காமை போன்ற தவறுகள் திறைசேரியினால் அந்த நிறுவனத்திற்கு கட்டுநிதியினை தற்காலிமாக நிறுத்தி வைப்பதற்கு வழிவகுக்கும் என்பதனை தயவுசெய்து குறித்துக்கொள்ளவும்.

5. இவ்விடயங்கள் குறித்து ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் அவசியமானவிடத்து, அதற்காக தயவுசெய்து கீழ்வரும் உத்தியோகத்தர்களைத் தொடர்பு கொள்ளவும்.

| பதவிநிலை உத்தியோகத்தரின் பதவி | பிரிவு | தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|
| பணிப்பாளர் | பொது நிதி முகாமைத்துவம் | 011-2484994<br>dilipl@tod.treasury.gov.lk |
| பணிப்பாளர் | மீளளிக்கக்கூடிய வெளிநாட்டு உதவி | 011-2484743<br>sumedhaw@tod.treasury.gov.lk |
| உதவிப் பணிப்பாளர் | பொது நிதி முகாமைத்துவம் | 011-2151487<br>manabaranag@tod.treasury.gov.lk |
| உதவிப் பணிப்பாளர் | வரவு செலவு நடைமுறைப்படுத்தல் பிரிவு - 01 | 011-2484745<br>himalic@tod.treasury.gov.lk |
| உதவிப் பணிப்பாளர் | வரவு செலவு நடைமுறைப்படுத்தல் பிரிவு - 02 | 011-2484739<br>be2@tod.treasury.gov.lk |
| உதவிப் பணிப்பாளர் | வரவு செலவு நடைமுறைப்படுத்தல் பிரிவு - 03 | 011-2484742<br>be3@tod.treasury.gov.lk |
| உதவிப் பணிப்பாளர் | வரவு செலவு நடைமுறைப்படுத்தல் பிரிவு - 04 | 011-2484744<br>madushau@tod.treasury.gov.lk |

ஒப்பம்: எம்.எஸ்.டி. ரணசிறி
பணிப்பாளர் நாயகம்
திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம்

பிரதிகள் :
1. கணக்காய்வாளர் நாயகம்
2. அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகம்
3. திட்டப் பணிப்பாளர்கள் - தயவு செய்து 3.1 இன் பிரகாரம் செயற்படுவதற்காக
4. பொது முகாமையாளர் – இலங்கை வங்கி
5. பொது முகாமையாளர் – மக்கள் வங்கி

} பந்தி 2.1, 2.2 மற்றும் 3.1 இல் குறிப்பிட்டுள்ளவாறு பண மீளளிப்பு செய்வதற்காக வேண்டி கணக்குகள் வைத்திருக்கும் அரச நிறுவனங்களுக்கு உரிய வசதிகளை ஏற்பாடு செய்வதற்காக வேண்டி.

படிவ இலக்கம் : **TOD/IMP/06**

எனது இலக்கம் :- ...........................

திகதி :- .......................................

முகாமையாளர்,
இலங்கை வங்கி / மக்கள் வங்கி.
.................. கிளை

கனம் ஐயா / அம்மணி,

**20… 12.31இல் காசுப் புத்தகத்தை மூடி**
**காசுப் புத்தகத்தில் உள்ள மேலதிக தொகையினை**
**திறைசேரிக்கு திருப்பியனுப்புதல்**
**நடைமுறைக் கணக்கு இலக்கம்...............**

அமைச்சு /திணைக்களம் /மாவட்டச் செயலகம் :- ....................................................

கட்டுநிதிக் கணக்கு இலக்கம்:- 7002/0/0/…../….

20…..12.31 அன்று இந்த அமைச்சின்/திணைக்களத்தின்/மாவட்டச் செயலாளர் அலுவலகத்தின் காசுப் புத்தகத்திற்கு ஏற்ப மீதியாகவுள்ள ரூபா .....................வினை *இலங்கை வங்கி தெப்ரோபேன் கிளையிலுள்ள திறைசேரிப் பிரதிச் செயலாளரின் இலக்கம் 2026450 கணக்குக்கு / *மக்கள் வங்கி யூனியன் பிளேஸ் கிளையிலுள்ள திறைசேரிப் பிரதிச் செயலாளரின் இலக்கம் 014-1-001-3-0110432 கணக்குக்கு செலவுவைத்து வரவுத்தாளொன்றினை எனக்கு வழங்கவும்.

இப்படிக்கு,
உண்மையுள்ள,

கணக்காளர்/பிரதிப் பணிப்பாளர் (நிதி)
அமைச்சின் செயலாளர் அல்லது திணைக்களத் தலைவருக்குப் பதிலாக

திகதி :- ...................................

பிரதான கணக்காளர் / பணிப்பாளர் (நிதி)
அமைச்சின் செயலாளர் அல்லது திணைக்களத் தலைவருக்குப் பதிலாக

திகதி :- ..........................................

பிரதி: பணிப்பாளர் நாயகம்
திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம்
இணைந்த நிதி முகாமைத்தவப் பிரிவு
பொதுத் திறைசேரி,
கொழும்பு 01.

தயவுசெய்து காசுப் புத்தக மீதியினை கட்டுநிதிக் கணக்கு இலக்கம் :- 7002/0/0/…../… க்கு செலவு வைக்கவும்.

* தேவையற்ற பகுதிகளை வெட்டிவிடவும்.

படிவ இலக்கம் : **TOD/IMP/07**

எனது இலக்கம் :- ……………………….

திகதி :- …………………………………

முகாமையாளர்,
இலங்கை வங்கி/மக்கள் வங்கி.
……………… கிளை

கனம் ஐயா / அம்மணி,

**20…. .12.31 அன்று மீளளிக்கத்தக்க வெளிநாட்டுதவிக்கான காசுப் புத்தகத்தினை மூடி மீதியினை திறைசேரிக்கு திருப்பியனுப்புதல் நடைமுறைக் கணக்கு இலக்கம்…………**

அமைச்சு/ திணைக்களம் / மாவட்டச் செயலகம் :- ……………………………………………
கருத்திட்டம்: …………………………….

கட்டுநிதிக் கணக்கு இலக்கம் - 7003/0/0/…../…..

20…..12.31 அன்று இந்த அமைச்சின்/திணைக்களத்தின்/மாவட்டச் செயலாளர் அலுவலகத்தின் காசுப்புத்தகத்திற்கு ஏற்ப மீதியாகவுள்ள ரூபா …………………வினை *இலங்கை வங்கி தெப்றொபேன் கிளையிலுள்ள திறைசேரிப் பிரதிச் செயலாளரின் இலக்கம் 2026450 கணக்குக்கு/*மக்கள் வங்கி யூனியன் பிளேஸ் கிளையிலுள்ள திறைசேரிப் பிரதிச் செயலாளரின் இலக்கம் 014-1-001-3-0110432 கணக்குக்கு செலவுவைத்து வரவுத்தாளொன்றினை எனக்கு வழங்கவும்.

இப்படிக்கு,
நன்றியுள்ள,

| | |
|---|---|
| நிதி முகாமையாளர்/கருத்திட்ட கணக்காளர்<br>திட்டப் பணிப்பாளருக்குப் பதிலாக | திட்டப் பணிப்பாளர்<br>அமைச்சின் செயலாளர் அல்லது திணைக்களத் தலைவருக்குப் பதிலாக |
| திகதி :- …………………….……… | திகதி :- …………………………………… |

பிரதி: 1. பணிப்பாளர் நாயகம்
கடன்சேவைகள் மற்றும் கணக்கீடுகள் பிரிவு
திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம்
பொதுத் திறைசேரி,
கொழும்பு 01.

} தயவுசெய்து காசுப் புத்தக மீதியினை கட்டுநிதிக் கணக்கு இலக்கம் 7003/0/0/…../ க்கு செலவு வைக்கவும்.

2.அமைச்சின் செயலாளர் - தகவல்களுக்காக

* தேவையற்ற பகுதிகளை வெட்டிவிடவும்.

படிவ இலக்கம் : TOD/IMP/07(i)

**20.....-12-31 அன்று முடிவுற்ற வருடத்திற்கான கட்டுநிதி இணக்கக் கூற்று**
**மீளளிக்கத்தக்க வெளிநாட்டு உதவி**

1. அமைச்சு /திணைக்களம் :-

2. கட்டுநிதிக் கணக்கு இல :-

3. கருத்திட்டம் :-

| மாதம் | பெற்றுக் கொண்ட கட்டுநிதி | | | செலவினம் | | | மீதி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மீவெஉ (1) | உநி (2) | மொத்தம் (3)=(1)+(2) | மீவெஉ (4) | உநி (5) | மொத்தம் (6)=(4)+(5) | மீவெஉ (1)-(4) | உநி (2)-(5) | மொத்தம் (3)-(6) |
| ஜனவரி | | | | | | | | | |
| பெப்ரவரி | | | | | | | | | |
| மார்ச்சு | | | | | | | | | |
| ஏப்பிரல் | | | | | | | | | |
| மே | | | | | | | | | |
| ஜூன் | | | | | | | | | |
| ஜூலை | | | | | | | | | |
| ஓகஸ்ட் | | | | | | | | | |
| செப்ரெம்பர் | | | | | | | | | |
| ஒக்ரோபர் | | | | | | | | | |
| நவம்பர் | | | | | | | | | |
| டிசம்பர் | | | | | | | | | |
| மொத்தம் | | | XX | | | XX | | | XXX |

வருட காலப்பகுதியில் பெற்றுக்கொண்ட மொத்தக் கட்டுநிதி (3) :- XXX

வருடத்திற்கான மொத்தச் செலவினம் (6) :- XXX

20….-12-31 இல் உள்ளவாறான மீதி :- XXX

தீர்க்கப்படாத முற்பணங்கள் (ஏதேனும் இருப்பின்)

| முற்பணத் திகதி:- | நிறுவனம்:- | காரணம்:- | தொகை - ரூபா. |
|---|---|---|---|
| ………………… | ………………. | ……………. | X |
| ………………… | ………………. | ……………. | X |
| | | | XX |

மேற்குறிப்பிட்ட தகவல்கள் சரியானவை என்று சான்றுப்படுத்துகின்றேன்.

…………………………….. திகதி : ………………

நிதி முகாமையாளர் / கருத்திட்டக் கணக்காளர்